2004 ஜுலை 29]

குரு மொழி கேளாச் சீடன்,
பாவத்தைத் தீரா தீர்த்தம்
பயனில்லை ஏழும்தானே"

என்பதுபோல எனது தொகுதிக்குட்பட்ட அச்சம்புதூர், ஆய்க்குடி, சாம்பவர் வடகரை, பண்பொலி வடகரை, கீழ்பிடாகை ஆகிய பேரூராட்சிகளுக்கும் குத்துக்கல்வலசை ஊராட்சி மற்றும் தேன்பொத்தை ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மேற்கண்ட கிராமங்களை உள்ளடக்கி தண்ணீர் வழங்க திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. எம். சுப்பையா பாண்டியன்: "கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்" என்ற பொன்மொழிக்கேற்ப, கேட்காமலேயே கொடுக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நடப்பு ஆண்டிலேயே மேற்கண்ட கிராமங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் தொடங்க உள்ளனவா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, அவருடைய தொகுதிக்கு உட்பட்ட அந்தப் பல்வேறு கிராமங்கள் மற்றும் 126 ஊரகக் குடியிருப்புகளைக் கொண்ட அந்தப் பகுதிகளில், இந்த ஆண்டில் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசானது இந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: வினா எண் 65, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

65—

கிராமங்களை ஊராட்சியாக்குதல்

***36538—திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வடியாங்குப்பம், சிவனார்தாங்கல் ஆகிய இரண்டு கிராமங்களையும் இணைத்து ஓர் ஊராட்சியாக ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வடியாங்குப்பம், சிவனார்தாங்கல் ஆகிய இரண்டு கிராமங்களையும் இணைத்து ஒரு ஊராட்சியாக ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 66, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

66—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

6525—திரு. கு. அண்ணாமலை:

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் பேரூராட்சி, வெண்ணமடையில் 20 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்து வரும் ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.